


# பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# பாவத்தை நீங்கள் எந்த உருவிலும் கண்டால், உடனே அதிலிருந்து குதித்து விலகியோடுங்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-10-15 M ***கேள்விகளும் பதில்களும்*** COD #15

14. அதைக் குறித்து நான் எண்ணிப் பார்க்கையில்; இதைக் குறித்து நான் எண்ணிப் பார்த்தேன். அதாவது மரணம் ஜீவனுடன் சம்பந்தப்பட்டதல்ல. ஜீவனும் மரணமும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. மரத்திலுள்ள இலைகள் செத்துப் போவதற்கு முன்பு, அதன் சத்து அதை விட்டு வெளியேற வேண்டும். எனவே, மரணமானது எதனுடன் சம்பந்தப்பட்டுள்ள தென்றால் - நான் மானிடர்களைக் குறித்து பேசுகிறேன் - மரணம் பாவத்துடன் சம்பந்தப் பட்டுள்ளது. ஏனெனில் நமக்கு பாவம் எதுவும் இருந்ததற்கு முன்பு, மரணம் இருக்கவேயில்லை. ஆனால் மரணம் எங்குள்ளதோ, அங்கு பாவம் உள்ளது; பாவம் எங்குள்ளதோ, அங்கு

மரணம் உள்ளது; ஏனெனில் பாவத்தின் பலனே மரணம்.

15. அதன் பிறகு, அவன்... பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே. 18:20). ஆனால் நாம் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்கும்போது, நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டு, மரணத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப் படாதவர்களாயிருக்கிறோம். பாருங்கள்? மரணம் ஜீவனுடன் சம்பந்தப்பட முடி யாது. ஜீவனும் மரணத்துடன் சம்பந்தப்பட முடியாது.

16. நேற்று சில வாலிப கிறிஸ்தவர்கள் கூடியிருந்த அறையில் நான் பேசிக் கொண்டிருந்த போது, "நீங்கள் சாலையில் நின்று கொண்டிருந்த போது, ஒரு கார் மணிக்கு தொண்ணூறு மைல் வேகத்தில் கட்டுக்கு மீறி சாலையில் வந்து கொண்டிருக்குமானால், நீங்கள் உங்களால்

முடிந்த வரையில் மிகவும் வேகமாக அந்த நெடுஞ்சாலையை விட்டு விலகி விடுவீர் கள். அந்த காரின் வழியிலிருந்து விலகிக் கொள்ள, நீங்கள் குதித்து, வழுக்கி, எது வேண்டுமானாலும் செய்வீர்கள்" என்றேன். அந்த விதமாகத் தான் பாவமும் ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டும், ஏனெ னில் பாவம் மரணத்துடன் சம்பந்தப்பட் டுள்ளது. பாவத்தை நீங்கள் எந்த உருவிலும் கண்டால், உடனே அதிலிருந்து குதித்து விலகியோடுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குக் கவலையில்லை, பொல்லாப்பின் தோற்றத் திலிருந்து விலகுங்கள். ஏனெனில் பாவத் துடன் சம்பந்தப்படுதல் மரணத்தை விளை விக்கும் என்பதை நினைவில் கொள்ளுங் கள். அது அங்கு நின்று கொண்டு, உங்களை நோக்கி வரும் கார் உங்கள் மேல் மோத விட்டுக் கொடுப்பது போல் உள்ளது.

17. நீங்கள், அது என்ன செய்யும் பார்க்கலாம் என்று காத்திராதேயுங்கள்; அதன் வழியிலிருந்து விலகி விடுங்கள். தீமையின் தோற்றத்தைக் கண்டால், அதை விரைவில் பறக்கணிக்து விடுங்கள். சோதனை வருவதை நீங்கள் காணும்போது, பாவம்... அது தவறான ஒன்றாக இருக்குமானால், மரணம் உங்கள் பின்னால் பதுங்கியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். பாருங்கள்? அப்படியானால், மணிக்கு தொண்ணூறு மைல் வேகத்தில் உங்களை நோக்கி வரும் மோட்டார் வாகனத்திலிருந்து எவ்வளவு விரைவாக தப்பி ஓடுவீர்களோ, அவ்வளவு விரைவாக இதையும் விட்டு ஓடிவிடுங்கள். நீங்கள் மோட்டார் வாகனத்தின் வழியிலிருந்து விரைவில் விலகிக் கொள்ள விரும்பு வீர்கள். நீங்கள் குதித்து, வழுக்கி, எப்படி யும் ஓடித் தப்பித்துக் கொள்வீர்கள்.

18. நமக்கு ஜீவன் உள்ளதென்று நாம் எப்படி அறிந்து கொள்கிறோமென்றால், நாம் பாவத்தை வெறுக்கும் காரணத்தாலே. நாம் பாவத்தை மிகவும் அதிகமாக வெறுக்கிறோம், அதனுடன் மரணம் சம்பந்தப்பட்டுள்ளதென்று நாம் அறிந்திருக்கிறோம், அது தோன்றும்போது, நாம் உடனே அதை புறக்கணிக்கிறோம். நாம் அதிலிருந்து எந்த வகையிலும் விலகியோட, நாம் குதிக்கிறோம், ஓடுகிறோம், பாவத்திலிருந்து விலகியிருக்க நாம் எதையும் செய்கிறோம், ஏனெனில் பாவத்தில் மரணம் உள்ளது. நாம் பாவத்துடன் தொடர்பு கொண்டிருக்க நிச்சயமாக விரும்புவதில்லை. அதிலிருந்து விலகியிருக்கவே விரும்புகிறோம்

19. எனவே அது ஒரு நல்ல சிறு கருத்தாய் இருக்குமென்று எண்ணினேன். நேற்று அந்த கிறிஸ்தவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது, இக்கருத்து

எனக்கு தோன்றினது; அதை இந்த சபைக்கு இன்று காலை எடுத்துரைப்பது நலமென்று எண்ணினேன் - முக்கியமாக இங்கு அமர்ந்துள்ள வாலிபப் பிள்ளைகளுக்கு இத்தகைய சோதனை நேரிடுகையில்.

20. பிறகு, இதனுடன் சம்பந்தப் பட்டுள்ள ஒரு கேள்வி கேட்கப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். அதை மட்டும் இப்பொழுது பார்க்க நேர்ந்தால்... இதை ஞாபகம் கொள்ளுங்கள், பாவமுள்ள எதி லுமே மரணம் படுத்துக் கிடக்கிறது. நீங்கள் பாவத்தில் பங்கு கொள்வீர்களானால், மரணத்தில் பங்கு கொள்கிறீர்கள். எனவே அதிலிருந்து விலகியிருங்கள்.

# வாழ்த்தும் போது கிறிஸ்தவ மனிதரும் ஸ்திரீகளும் ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொள்வது சரியா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும் COD #15

Q.156. **வாழ்த்தும்போது கிறிஸ்தவ மனிதரும் ஸ்திரீகளும் ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொள்வது** (ஓ!) **சரியா?**

120. இல்லை, ஐயா! இல்லவே இல்லை! இல்லை, ஐயா! நீங்கள் ஒரே ஒரு பெண்ணைத்தான் முத்தமிடலாம், சகோ தரனே. அது உங்கள் மனைவி (பாருங் கள்?), அல்லது உங்கள் பிள்ளையை, அல்லது பாருங்கள்?

"அது சரியா... அதை சரியாக படித் தேனா என்று பார்க்கட்டும்: வாழ்த்தும் போது கிறிஸ்தவ மனிதரும் ஸ்திரீகளும் ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொள் வது சரியா?"

121. இல்லை, ஐயா! இல்லவே இல்லை! அது... அதை ஒரு போதும் தொடங்கி விடாதீர்கள்! ஆம், ஐயா! வேண்டாம், ஐயா! ஸ்திரீகளிடத்திலிருந்து விலகியிருங்கள். அவர்களை விட்டுப் புறம்பேயிருங்கள். முற்றிலும் உண்மை.

122. இப்பொழுது, அவர்கள் நமது சகோதரிகள். ஆனால் செய்யாதீர்கள். இப்பொழுது, அவர்களுக்கு அது உள்ளது. அது... அது பெந்தெகொஸ்தே சபைகளி லும் கூட நுழைந்து விட்டது, அது "சுயாதீன அன்பு" (free love) என்று அழைக் கப்படுகிறது. யாராகிலும் அவ்விதம் செய் வார்களானால், அதை விட்டு விலகி யிருங்கள். அது உண்மை!

123. நீங்கள் எவ்வளவு சுத்தமாயிருந் தாலும், எனக்கு கவலையில்லை... நீங்கள் என் சகோதரன், நீங்கள் ஒரு நல்ல

பரிசுத்தமாக்கப்பட்ட, பரிசுத்த மனிதன் என்று நான் நம்புகிறேன். நீங்கள் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தாலும், எனக்குக் கவலையில்லை; நீங்கள் இன்னும் ஒரு மனிதனே; அவள் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தாலும் எனக்குக் கவலை யில்லை; அவள் இன்னும் ஒரு ஸ்திரீயே. உங்களுக்கு விவாகமாகும் வரைக்கும் அதை விட்டு விலகியிருங்கள். அவ்விதம் நீங்கள் செய்யுங்கள்

124. ஞாபகம் கொள்ளுங்கள், சரீர மானது... இப்பொழுது நான் இரு சாரா ரிடமும் பேசப் போகிறேன். அப்பொழுது வயது வந்த நீங்கள் புரிந்து கொள்வீர்கள். இது ஆண்களும் பெண்களும் கலந்துள்ள கூட்டம். ஆனால் நான் உங்கள் சகோதரன். இது கேட்கப்பட்ட ஒரு கேள்வி. பாருங் கள்?

125. மனித குலத்தைச் சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு சுரப்பிகள் (glands) உண்டு. பெண்ணுக்கு பெண் சுரப்பி உள்ளது, இன சுரப்பி. ஆணுக்கு ஆண் சுரப்பி உள்ளது. இன சுரப்பி. இந்த சுரப்பிகள் மனித உதடுகளில் அமைந்துள்ளன. அது உண்மை.

126. மற்றும் ஒன்றைத் தொடங்க வாய்ப்புண்டு, அதாவது மனிதன் வேறொரு மனிதனை வாயில் முத்த மிடுதல். அது அசுத்தமான செயல்! அது அசுத்தம்! அது என்ன செய்கிறது? அது ஓரினப் புணர்ச்சிக்காரரைத் தோற்றுவிக் கிறது. அதிலிருந்து விலகியிருங்கள்! நீங்கள் சொல்லலாம்...

127. அண்மையில் ஒரு ஆள் என்னிடம், “சகோ. பிரன்ஹாமே, அவர்கள் ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தினால்

வாழ்த்தினார்களே' என்றார். அவர்கள் கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டனர். அவர்கள் கழுத்தின் மேல் விழுந்து அவர்களைக் கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டனர். அது கைக்குலுக்குதல் உள்ளே வருவதற்கு முன்பு. அது ஒரு வாழ்த்துதல். அப்படித்தான் அது உள்ளது. அவர்கள் ஒருவர் கைகளை ஒருவர் குலுக்குவதில்லை; அவர்கள் ஒருவரை யொருவர் தழுவி, ஒருவரையொருவர் கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டனர் - உதடுகளிலோ, முகத்திலோ அல்ல. அவ்விதம் செய்வது சீர்குலைதலை உண் டாக்கும். அதிலிருந்து விலகியிருங்கள். அவ்விதம் செய்யாதீர்கள்!

128. இந்நாட்களில் நாம் ஒருவரோ டொருவர் கைகுலுக்குகிறோம். நீங்கள் விரும்பினால்... உங்கள் சகோதரனைக் கட்டித் தழுவி, அவரைக் கழுத்தின்

பின்புறத்தில் முத்தமிடலாம். அல்லது அவர் உங்களை கழுத்தின் பின்புறத்தில் முத்தமிடலாம், அதில் தவறொன்று மில்லை. ஆனால் ஒரு ஸ்திரீயை முத்தமிடாதீர்கள். அவளும் உங்களை முத்தமிட அனுமதிக்காதீர்கள். பாருங்கள்? அது உண்மை! நீங்கள் அவள் கையைப் பிடித்து. "ஒரு நிமிடம் பொறு. சகோ தரியே. ஒரு நிமிடம்; இதை நேராக்கிக் கொள்வோம்" என்று சொல்லுங்கள். எனவே அதை செய்யுங்கள்.

129. சற்று முன்பு, பிரசங்கத்தின் தொடக்கத்தில் நான் உங்களிடம் என்ன கூறினேன்? தொண்ணூறு மைல் வேகத்தில் ஒரு கார் சாலையின் வழியாக வருவதைக் காண்பீர்களானால், அதன் வழியிலிருந்து விலகுங்கள். அது உண்மை! நீங்கள் அப்படிப்பட்ட ஒரு சிறு மாற்றத்தை ஏதாகிலும் ஒன்றில் காணும்போது,

அதிலிருந்து விலகுங்கள். அவ்விதமான தரையில் நீங்கள் இருக்கக் கூடாது. சாத்தான் உங்களுக்கு முன்பாக ஏதாவ தொன்றைக் கொண்டுவந்து, அது உங்கள் ஆத்துமாவை சேதப்படுத்தி உங்களை நரகத்துக்கு அனுப்பி விடும். அதிலிருந்து விலகியிருங்கள்! பொல்லாங்கை கண்டால் அதைப் புறக்கணியுங்கள். அது உண்மை.

130. மனிதனாக இருங்கள், ஸ்திரீயாக இருங்கள்... ஒரு நிமிடம் நான் ஸ்திரீகளை ஆதரித்து பேசப் போகிறேன். அது வழக்கத்துக்கு மாறானது, இல்லையா? அவர்கள், “ஓ.. ஸ்திரீயே அதற்கு காரணம்! ஓ, அது ஸ்திரீயின் தவறு. அவள் தன் வழியை விட்டு விலகாமல் இருந்தால், மனிதனும் அவன் வழியை விட்டு விலகாமல் இருந்திருப்பான்' என்கின்றனர். அது உண்மை. அது உண்மையென்றே வைத்துக் கொள்வோம். அவள் தன்

வழியை விட்டு விலகிவிட்டாள். ஒரு கெட்ட ஸ்திரீ இல்லாமல் போனால், மனிதன் கெட்டவனாக இருக்க முடியாது; ஆனால் கெட்ட மனிதன் இல்லாமல் ஒரு கெட்ட ஸ்திரீ இருக்க முடியாது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அது உண்மை!

131. தேவனுடைய புத்திரன் என்று உரிமை கோருபவனே, உன்னுடைய கொள்கைகள் எங்கே? ஒரு ஸ்திரீ தன் வழியை விட்டு விலகினாலும், நீ தேவனுடைய புத்திரன் அல்லவா? நீ அவளைக் காட்டிலும் உயர்ந்த, அதிக பெலமுள்ள பாண்டம் அல்லவா? அவளை பெலவீனமான பாண்டம் என்று வேதம் அழைக்கிறதே. அவள் பெலவீனமா யிருந்தால், உன்னை தேவனுடைய மனிதனாகக் காண்பி. அவளிடம், “சகோதரியே, நீ தவறாய் இருக்கிறாய்' என்று சொல். அது உண்மை! அவ்விதம்

நான் செய்திருக்கிறேன், மற்ற கிறிஸ்தவர்களும் செய்துள்ளனர். நீ கிறிஸ்தவனாக இருக்கும் வரைக்கும் அவ்விதம் செய்வாய். உன்னைக் கிறிஸ்தவனாகக் காண்பி. நீ தேவனுடைய புத்திரன். உனக்கு ஸ்திரீயைக் காட்டிலும் உன் மேல் அதிக கட்டுப்படுத்தும் வல்லமை உள்ளது. அவள் பெலவீனமாயிருந்தால். அவள் பெலவீனமானவள் என்பதை அடையாளம் கண்டு கொள். அவளுடைய தவறுகளைப் புரிந்து கொள், அவளைத் திருத்த முயற்சி செய். அவளிடம், 'சகோதரியே, நாம் கிறிஸ்தவர்கள். நாம் அவ்விதம் செய்யக் கூடாது என்று சொல். பார்? உண்மையான ஒரு மனிதனாயிரு, தேவனுடைய புத்திரனாக இரு. ஸ்திரீகளை கவனி.

132. அங்கு தான் தொடக்கத்தில் பெரிய வீழ்ச்சி உண்டானது. அது சாத்தான் ஏவாளுடன் கூட. அதன் மூலமாகத் தான்

மானிட வர்க்கம் முழுவதுமாக விழுந்து போனது.

133. நீ தேவனுடைய புத்திரனாயிருப் பாயானால், பெலமுள்ளவனாயிரு: உண் மையில் ஒரு மனிதனாயிரு. நீ அவ்விதம் இராமல் போனால், அவ்விதம் ஆகும் வரைக்கும் பலிபீடத்தில் தங்கியிரு. பொல்லாங்கு தோன்றும் போதே, அதை புறக்கணித்து விடும். இந்த விதமான வாழ்த்துதலை இப்பொழுது தொடங்காதே.

134. சில நாட்களுக்கு முன்பு யாரோ ஒருவர் என்னிடம், அவர்கள் இரண்டு மூன்று முறை இங்குள்ள என் சபையில் கண்டதாக... இந்த சபையில் உள்ளவர்கள் அல்ல, ஆனால் இந்த சபைக்கு வெளி யிலிருந்து வந்த மக்கள் செய்வதை. இன்று காலை நீங்கள் இங்கு உட்கார்ந்திருக்க நேர்ந்தால், இதை உங்களுக்கு மிகவும்

ஆழமாக பதிய வைக்கப் போகின்றேன். பாருங்கள்?

135. ஸ்திரீகள், வாலிப ஸ்திரீகள் வருவதும், இந்த மனிதர் இந்த ஸ்திரீகளை முத்தமிடுவதும். அவ்விதம் செய்யாதீர்கள்! அதிலிருந்து விலகியிருங்கள். இதை - ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! அவள் வாலிபப் பெண்ணாக, விவாக மாகாதவளாக இருப்பாளானால், என்றா வது ஒரு நாள் அவள் யாரோ ஒருவரின் மனைவியாக இருப்பாள். அதைச் செய்ய உங்களுக்கு அதிகாரமே கிடையாது. அவளை விட்டு விலகியிருங்கள். அவ ளுக்கு வாழ்த்து கூற நீங்கள் விரும்பினால், ஒரு தேவனுடைய புத்திரனாக, அவளுடன் கைகுலுக்கி, “எப்படியிருக்கிறாய், சகோ தரியே?” என்று கேளுங்கள். அத்துடன் அது முடிவு பெறட்டும். பாருங்கள்?

136. இத்தகைய காரியங்களிலிருந்து விலகியிருங்கள்; அது அசுத்தம்! அது விரைவில் உங்களைத் தொல்லையில் மாட்டி விடும். நீங்கள் சும்மா... ஓ. அது... பாவம் மிகவும் எளிதாகவும், பசியை உண்டு பண்ணுவதாகவும், இனிமையாக வும் உள்ளது. அதற்குள் விழுவது மிகவும் எளிது. செய்யக்கூடிய சிறந்த காரியம் என்னவெனில், அது தோன்றுவதைக் காணும்போதே, அதிலிருந்து விலகியிருத் தலே. திரும்பிப் போய் விடுங்கள். உண்மையான கிறிஸ்தவனாக இருங்கள்!

137. மனிதன் ஒருவரையொருவர் முத்தமிடும் விஷயத்தில், உங்கள் சகோ தரனை நீங்கள் கழுத்தில் முத்தமிட்டால், அவ்விதம் செய்ய நீங்கள் விரும்பினால், அது சரியானது. ஆனால் எந்த மனி தனையும் உதடுகளில், வாயில், முத்தமிடா தீர்கள். அப்படி ஒன்றும் செய்து விடா

தீர்கள். ஏனெனில் அது சரியல்ல. பாருங்கள்? தொடக்கத்திலேயே ஏதோ தவறுள்ளது என்பதை அது காண்பிக்கிறது. பாருங்கள்? எனவே அதிலிருந்து விலகி யிருங்கள். அதைப் புறக்கணியுங்கள். அதை இங்குள்ள இந்த கூடாரத்தில் தொடங்கி விடாதீர்கள். வேண்டாம், அதை நாங்கள் நிச்சயமாக ஆதரிக்க முடியாது. பாருங்கள்?

138. உங்கள் சகோதரனை நீங்கள் காண விரும்பினால், அவரை கழுத்தில் முத்தமிட விரும்பினால், நல்லது. நீங்கள் முன்சென்று அதைச் செய்யுங்கள். ஆனால் ஜனங்களை வாயில் முத்தமிடாதீர்கள். ஏனெனில் அது கிரியை செய்யாது, அது சரியல்ல. அது ஒரு சீர்குலைதலைத் தொடங்குகிறது. அது ஓரினப் புணர்ச்சிக் காரர்களையும் அப்படிப்பட்ட காரியங் களையும் தோன்றச் செய்கிறது.

139. இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்யத் தூண்டுவது இரண்டு காரியங் களே... நீங்கள் தொடங்கினால்... அந்த மனிதன்... நான் கண்டிருக்கிறேன்... ஓ. பலமுறை, ஜனங்களின் மத்தியிலே. அவர் கள் வருவார்கள். சபைகளில் கண்டிருக் கிறேன். போதகர் வந்து ஒவ்வொரு சகோதரியிடமும் சென்று அவளைத் தழுவி முத்தமிட்டு அவளை உட்காரச் செய்வார். "எப்படியிருக்கிறாய். சகோதரியே, அல்லே லூயா! மற்றொரு சகோதரியிடம் சென்று அவளை முத்தம்மிடுவார். இப்படியாக சபை முழுவதிலும் சென்று செய்வார். என்னைப் பொறுத்த வரையில் அது தவறு!

140. நான் ஃபின்லாந்தில் இருந்த போது, நாங்கள் எல்லாரும் அங்கு சென்றிருந்தோம்... உங்களுக்கு அது ஒருவேளை தெரிந்திருக்கும், அங்கு நாங்கள் கூட்டங்கள் நடத்தினோம். நான்

ஒய்.எம்.சி.ஏ.வுக்கு சென்றிருந்தேன். ஃபின் லாந்தில் சோப்புகள், டிடெர் ஜெண்டுகள் எதுவும் இருக்கவில்லை. என்னிடம் சவர சோப்பு இருந்தது. நாங்கள் ஒவ்வொரு வரும் அங்கு நின்று கொண்டு, அந்த சவரசோப்பை உபயோகித்து குளிக்க வேண்டியதாயிற்று. எங்களிடம் ஒரு துண்டு சோப்பு மாத்திரமே இருந்தது. ஃபின்லாந்தில் சோப்புகள் கிடையாது. அவர்கள் ஏதோ ஒருவகை இரசாயனப் பொருளை உபயோகித்து குளிக்கிறார்கள். அது உங்கள் தோலை அரித்து விடுகிறது.

141. எனவே அவர்கள். அவர்கள் எங்களை ஃபின்லாந்து தேசத்து 'சானா' குளியலுக்கு கொண்டு போகப் போவதாக கூறினார்கள். நாங்கள் ஒய்.எம்.சி.ஏ.வுக்குச் சென்றோம். 'சானா' குளியலுக்காக அங்கு சென்றோம். அது பிரபலம் வாய்ந்த ஃபின்லாந்து தேசத்து 'சானா'. இதற்கு

முன்பு நான் 'சானா' குளியலை எடுத்திருக்கிறேன். அது நன்றாயிருந்தது. நான், 'நல்லது. நாம் ஒய்.எம்.சி.ஏ.வுக்குப் போகப் போகிறோம். அது நன்றாயிருக்கும்" என்று எண்ணினேன்.

142. ஆனால் அங்கு போக நான் புறப்பட்ட போது, பரிசுத்த ஆவியானவர் என்னிடம், "அப்படிச் செய்யாதே (ஓ, பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளது மிகவும் நல்லது), அப்படிச் செய்யாதே என்றார்.

நல்லது. நான் உடனே, "இன்று காலை எனக்கு குளியல் அவசியமில்லை என்று நினைக்கிறேன் என்று சொன்னேன்.

டாக்டர் மானியனும் மற்றவர்களும், "ஓ, சகோ. பிரன்ஹாமே, என்னே, அங்கே சில பெரிய கண்ணாடி அறைகள் உள்ளன. அது மிகவும் அழகானது' என்றனர்.

வழக்கமாக அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், அவர்கள் இந்த தண்ணீரை அந்த பாறைகளின் மேல் ஊற்றி அதை ஆவியாக மாற்றி, உங்களை 'பிர்ச் (birch) மரத்தின் இலைகளால் இப்படி அடிப்பார்கள். அதன் பிறகு நீங்கள் வெளியே ஓடி குளிர்ந்த தண்ணீரில் குதிக்க வேண்டும். ஃபின்லாந்து நாட்டினர் பனிக் கட்டி போன்றவைகளுக்குள் செல்கின் றனர்.

(ஒலிநாடாவில் முதலாம் பக்கம் முடிந்து இரண்டாம் பக்கம் தொடர்ச்சி இல்லாமல் தொடங்குகிறது - ஆசி).


அதைச் செய்வதற்கு ஒரே
வழியுண்டு; அதை அறிக்கை செய்.
அது உன் தோலை உரித்தாலும்,
அதை எப்படியும் செய்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: கேள்விகளும் பதில்களும், ஆகஸ்டு 23, 1964 மாலை

288. **இது ஞாயிறு ஆராதனைகளுக் காக. ஒரு ஸ்திரீ ஒரு தவறைச் செய்து...** (இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள்; இதை நான் முதலில் படிக்கட்டும். பாருங்கள்? (சகோ.பிரான்ஹாம் தனக்குள் அந்த கேள்வியைப் படிக்கிறார் - ஆசி) சரி, அது பரவாயில்லை). **ஒரு ஸ்திரீ விவாக மான ஒரு மனிதனுடன் ஒரு தவறைச் செய்து, மனந்திரும்பி, வேதத்தின்படி தன் கணவ ருடன் அதை சரி செய்து கொண்டு விட்ட பிறகு, அவள் ஈடுபட்ட அந்த மனிதனின் மனைவிக்கு இதைக் குறித்து ஒன்றும் அறியாமலிருந்தாலும், அவளிடம் சொல்ல வேண்டியது அவசியமா? அல்லது அந்த மனிதன் அவளிடம் முதலில் சொல்ல வேண்**

**டுமா? அல்லது அவளைப் புண்படுத்துவது அவசியம்தானா? இது நடந்து முடிந்தபிறகு, நட்புத்தன்மை ஈடுபட்டுள்ள இவ்விஷயத்தில் எவ்வளவு தூரம் நாம் சென்று இதை சரி செய்து கொள்ள வேண்டும்?**

83. நல்லது, என் அருமை சகோதரியே, நீ ஒரே ஒரு காரியத்தை மட்டும் சரியாகச் செய்திருக்கிறாய். நீ அதில் ஈடுபட்டாய் என்று நினைக்கிறேன், அல்லது உனக்குத் தெரிந்த யாரோ ஒருத்தி இந்த தவறான செயலில் ஈடுபட்டிருக்கிறாள். நீ வேறொரு ஸ்திரீயின் துணைவருடன் இந்த சமூக செயலைச் செய்திருக்கிறாய். நீ அதைச் செய்த போது கிருபையிலிருந்து விழுந்து விட்டாய். அதன் பிறகு நீ மனந்திரும்பி னாய். நீ அந்த மனிதனிடம் சென்று அதை சரி செய்து கொள்ளும் வரைக்கும் உன்னால் மனந்திரும்ப முடியாது. நீ அந்த செயலில் ஈடுபட்ட அந்த மனிதனிடம் உன்

கணவரையும் கூட்டிக் கொண்டு செல்ல வேண்டும். அந்த காரியத்தை தான் நீ செய்திருக்க வேண்டும். அது தான் வேதப் பிரகாரமானது.

84. இங்குள்ள லூயிவில்லில் வசிக்கும் ஒருத்தி என்னிடம் வந்திருந்தாள். அவள் ஒரு வாலிபப் பெண். அவள் ஒரு மனிதனுடன் தொடர்பு கொண்டிருந்தாள். அதன்பிறகு அவள்... அவள் செய்வது தவறென்று அறிந்து கொண்டாள். எனவே அவள் நகரத்தை விட்டு, தூரத்திலுள்ள வேறொரு நகரத்துக்கு சென்று, அவளுடைய பெயரை மாற்றிக் கொண்டு, அங்கிருந்த சிலருடன் வாழ்ந்து வந்தாள். இந்த மனிதன் அவளைப் பின்தொடர்ந்து அங்கு அடைந்து அவளிடம், அவள் மேல் இந்த சுமை உள்ளதென்றும், அவள் அவனுக்கு மனைவியாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், இல்லையென்றால்

அவன் இந்த விவகாரத்தைக் குறித்து கூறிவிடு வானென்றும் பயமுறுத்தினான் (அவள் அந்த இடத்தில் ஒரு அருமையான கிறிஸ்தவனை மணந்து கொண்டாள்). அவள் அவ்விதம் நடந்து கொள்ளாவிட் டால் அவன் முழு விவகாரத்தையும் அம்பலப்படுத்தி விடுவதாக மிரட்டினான். எனவே அவள் தொடக்கத்தில் தன் நிறத்தைக் காண்பிப்பதற்கு பதிலாக இந்த இரு மனிதருக்கும் வாழ்க்கைப்பட வேண்டியதாயிற்று. அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்த பெண்ணுக்கு இப்பொழுது பதினெட்டு வயதாகின் றது. இவர்களில் யார் அவளுடைய தகப்பன் என்று அவளுக்குத் தெரியாது. இப்பொ ழுது அவளுடைய மாதவிடாய் நின்று விட்டது, அது அவளுக்கு நேர்ந்து விட்டது. இப்பொழுது அவளால் என்ன

செய்ய முடியும்? நான், "நீ செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று " என்றேன்.

அவள், "என் கணவரிடம் இதைப் பற்றி கூறினால், அவர் என்னை விட்டுப் போய் விடுவார். என் மகள் அறிந்தால், அவள் தற்கொலை செய்து கொள்வாள்" என்றாள்.

85. நான் அவளிடம், "இதை நீ மனதிலே வைத்துக் கொண்டிருந்தால், நீ நரகத்துக்குப் போவாய். இப்பொழுது, நீ எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்" என்றேன். செய்ய வேண் டிய ஒரே ஒரு காரியம் அதை துடைத்து சரிபடுத்திக் கொள்வதே. அது முற்றிலும் உண்மை. உண்மையுள்ளவளாயிரு.

86. உங்களுக்குத் தெரியும், அநேக சமயங்களில், ஸ்திரீகளும் மனிதரும் வரும்போது, தரிசனங்களில், பரிசுத்த ஆவியானவர் அவர்கள் வாழ்க்கையில்

செய்தவைகளை தோண்டி எடுத்து வெளிப் படுத்துவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், கண்டிருக்கிறீர்கள், அது உங்களுக்குத் தெரியும். பாருங்கள்? அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதையும் அவர் அவர்களிடம் எடுத்துரைத்திருக்கிறார்.

அவர்கள், "நல்லது, நான் அதை ஏற்கனவே கர்த்தரிடம் சரி செய்து கொண்டு விட்டேன்" என்கின்றனர். ஆனால் நீங்கள் உங்கள் கணவரிடமோ அல்லது உங்கள் மனைவியிடமோ சென்று அவர்களிடம் இதைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். அது உண்மை. நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும்.

87. இப்பொழுது, இந்த நபர், அவள் குற்றவாளியாயிருப்பாளானால், அவள் அதைச் செய்து விட்டாள்; அவள் தன் கணவரிடம் சென்று அறிக்கை செய்து

விட்டாள். இப்பொழுது, சகோதரியே, உன்னை நீ சுத்தப்படுத்திக் கொண்டு விட்டாய், ஏனெனில் இடையில்... நீ உன் கணவருக்கு விரோதமாக விபச்சாரம் செய்தாய், நீ உன் கணவரிடம் சென்று அறிக்கையிட்டு உன்னை சுத்தப்படுத்திக் கொண்டு விட்டாய். அதன் பிறகு அந்த மனிதனிடமும் சென்று அங்கேயும் அதை சரிசெய்து கொண்டு விட்டாய். நீ சுத்த மாயிருக்கிறாய். உன் கணவர் உன்னுடன் தொடர்ந்து வாழ விரும்பினால், நீ மறுபடியும் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யாதபடிக்கு நற்பண்புள்ளவளாயிரு, அவர் அக்குற்றத்தை மன்னிக்காவிட்டால், அது அவருடைய சொந்த விஷயம். அவர் உன்னைத் தள்ளிவிடலாம். முற்றிலும் உண்மை .

88. இப்பொழுது, அச் செயலில் நீ ஈடுபட்ட அந்த மனிதன், அவர்தான் தன்

மனைவியிடம் சென்று அவளை உன்னிடம் கூட்டிக் கொண்டு வர வேண்டும். உன் பாகத்தை நீ செய்து விட்டாய், அவர் தன்னுடைய பாகத்தை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. பார்?

89. இந்த ஸ்திரீ அந்த மனிதனுடன் அந்த செயலில் ஈடுபட்டாள். அவள் தன் கணவரிடம் சென்று அதை அறிக்கையிட்டு விட்டு, அந்த மனிதனிடமும் சென்று அதை அறிக்கையிட்டு விட்டு, அதை சரி செய்து கொண்டு விட்டாள். அந்த மனிதனும் விவாகமானவர். இப்பொழுது அவர் தன் மனைவியிடம் சென்று அவளைக் கூட்டிக் கொண்டு இந்த ஸ்திரீயிடம் வரவேண்டும். அப்பொழுது அது சரியாகி விடும். நான் கூறுவது விளங்குகிறதா? அப்பொழுது அது தீர்ந்து விடும். அதை செய்யாமல் போனால், உன்

இருதயம் உன்னைக் குற்றப்படுத்திக் கொண்டிருக்கும்.

90. அண்மையில், முதலாம் உலகப் போர் முதற்கொண்டு இப்படிப்பட்ட ஒரு நிலையில் இருந்த ஒரு ஸ்திரீ என்னிடம் வந்திருந்தாள். அவள், “ஓ, சகோ. பிரான்ஹாமே" என்றாள். அவள் மனநிலை நிபுணர்களுக்கு ஆயிரக்கணக்கான டாலர்கள் செலவழித்து விட்டாள். அங்கு நான் உட்கார்ந்து கொண்டு அந்த அறையில் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். மேடா அவளை இங்கு கொண்டு வந்திருந்தாள். அவள் அங்கு உட்கார்ந்து கொண்டு, கைக்குட்டையை தன் கையில் இப்படி பிசைந்து கொண்டு, “உலகம் வெடித்து விடப்போகிறது போன்ற உணர்வு எனக்கு உண்டாகிறது. நான்...' என்றெல்லாம் பிதற்றிக் கொண் டிருந்தாள்.

நான் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தேன். நான் “இது ஏதோ ஒன்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது. உன் வாழ்க்கையில் எங்காவது ஏதாகிலும் நடந்ததுண்டா?" என்று கேட்டேன்.

அவள், "இல்லை, நான் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியை" என்றாள்.

நான், “சரி” என்றேன். அங்கு சிறிது உட்கார்ந்து கொண்டு அவளைக் கவனித்தேன். "நான் பச்சை நிறக் கார் ஒன்றைக் காண்கிறேன், நீ வெள்ளை தலைமயிர் கொண்ட ஒரு மனிதனுடன் அதில் இருக்கிறாய். ஒரு ரயில் வண்டி ஏறக்குறைய அந்த காருடன் மோதி விட்டது" என்றேன்.

அவள், “அதை யாரிடமும் சொல்லாதீர்கள்" என்றாள்.

நான், “உன் கணவர் அப்பொழுது இராணுவத்தில் இருந்தார்" என்றேன்.

அவள் அழுது புலம்பி மேலே குதித்தாள். “அதை யாரிடமும் சொல்லாதீர்கள்” என்றாள். பாருங்கள்? அது அவள் உள்ளுணர்வில் குடிகொண்டிருந்தது. அவள், "நான் நீண்ட காலத்துக்கு முன்பே அதை தேவனிடம் அறிக்கை செய்து விட்டேன்" என்றாள்.

91. நான் “ஒரு நிமிடம் பொறு. நீ தேவனுக்கு விரோதமாக தவறு செய்ய வில்லை. உன் விவாகப் பொருத்தனைக்கு விரோதமாக நீ ஒரு பாவத்தைச் செய் திருக்கிறாய். நீ உன் கணவரிடம் சென்று அதை முதலில் சரி செய்து கொள்ள வேண்டும்” என்றேன்.

அவள், “அவர் என்னை விட்டுப்போய் விடுவார்" என்றாள்.

நான், “தேவன் எப்படியும் உன்னை விட்டு போய் விட்டார். இப்பொழுது, யார் உன்னை விட்டு போக வேண்டுமென்று நினைக்கிறாய்? உன் கணவரிடம் போ” என்றேன்.

அவள், “ஓ, நான்- நான்... அவர் இதை செய்வார், எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்" என்றாள்.

நான், "நல்லது. இவ்வளவு தான் நான் உன்னிடம் கூற முடியும். மன நிலை நிபுணர் அதை உனக்குள்ளிருந்து வெளியே கொண்டு வரவில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவர் அதை வெளிப் படுத்தினார். உன்னை நான் என் வாழ்க் கையில் கண்டதேயில்லை" என்றேன்.

அவள், “அது முற்றிலும் உண்மையே. நல்லது. நான் அவரிடம் கூற முடியாது" என்றாள்.

நான், "நல்லது. நான்... உன்னை சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி” என்று சொல்லிவிட்டு, அடுத்த அறைக்குச் சென்று விட்டேன். மேடா அங்கு வந்தாள்.

மேடா, "அவள் உங்களைக் காண விரும்புகிறாள்" என்றாள். ' நான் அங்கு சென்று, “உனக்கு என்ன வேண்டும்?” என்றேன்.

அவள், “சகோ.பிரான்ஹாமே, அதை என் கணவரிடம் என் னால் கூற இயலாது” என்றாள்.

நான், “உன் கணவர் கறுப்பு தலைமயிர் கொண்டவர்" என்றேன். “ஆம்."

நான், “அதேவிதமான ஒரு காரியத்தை அவர் உன்னிடம் அறிக்கை செய்ய வேண்டியவராயிருக்கிறார்" என்றேன்.

அவள், “ஓ, என் கணவர் அப்படிப் பட்டவர் அல்ல” என்றாள்.

நான், "நீ போய் அவரை இங்கு கூட்டிக் கொண்டு வா. ஒரு குறிப்பிட்ட ஸ்திரீ உனக்குத் தெரியுமா, அவள் 'பிங்க்' நிற ஆடை அணிவதுண்டு. அவள் ஒரு குறிப்பிட்ட மோட்டார் வாகன நிர்வாகத் தின் அலுவலகத்தில் வேலை செய்கிறாள்" என்றேன்.

அவள், "நிச்சயமாக" என்றாள்.

நான், “அவளை ஒரு குறிப்பிட்ட பெயரால் அழைக்கிறார்கள் அல்லவா?" என்றேன்.

“ஆம்."

நான், “இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர்கள் ஒரு 'பீச்' (beech) மரத்தின் அடியில் ஒரு பழுப்பு நிற ஷெவர்லே

காரில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அதன் லைசென்ஸ் நம்பர் இன் னின்னது. அவர்கள் அதே செயலில் ஈடுபட்டிருந் தனர்" என்றேன்.

அவள், "அது என் கணவராக இருக்காது" என்றாள். நான், "சரி, அவரை இங்கு கூட்டிக் கொண்டு வா" என்றேன்.

அவள் சென்றாள். சில நிமிடங்கள் கழித்து அவர்கள் இருவரும் வந்தனர். அவர், "அது உண்மை " என்றார்.

நான், “பார்த்தாயா? நீ போய் தேவ னிடம் சொல்" என்றேன்.

92. ஆனால் முதலாவதாக, நீ பலிபீடத்தினிடத்தில் வரும் போது, குறை உண்டென்று கண்டால், நீ போய் அதை சரி செய். அந்த நபர் தன் மனைவியிடம் அதை கூறாமல் குற்றவாளியாயுள்ள வரைக்

கும்..... இந்த மனைவி தன்னை சுத்தப்படுத்திக் கொண்டாள். இப்பொழுது அது மற்ற பெண்ணையும் அவளுடைய கணவரையும் பொறுத்தது. இந்த மற்ற மனிதனும் அவருடைய மனைவியும் அதை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். உன்னால் முடியாது... நீ என்ன செய்த போதிலும், நீ அதை சுத்தமாக கழுவிக் கொள்ளாவிட்டால், அது உன்னை உன் வாழ்நாள் முழுவதும் அலைக்கழித்துக் கொண்டேயிருக்கும். அதைச் செய்வதற்கு ஒரே வழியுண்டு; அதை அறிக்கை செய். அது உன் தோலை உரித்தாலும், அதை எப்படியும் செய். உண்மையைச் சொல், அப்பொழுது நீ அதை சரியாக பெற்றுக் கொண்டாய். ஆமென்!

93. இந்த ஒலிநாடாவைக் கேட்கும் அநேகர், “இது தவறு" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. அதை

ஒருமுறை முயன்று பார்த்து அது சரியா என்பதைக் கண்டுக்கொள்ளுங்கள். சரி.




தேவபக்தியற்ற ஒவ்வொரு
காரியங்களிலிருந்தும் விலகியிரு.
அதைவிட்டு தூரமாய்ப் போ.
அதைவிட்டு விலகியிரு.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: தீர்க்கதரிசியாகிய மிகாயா, ஏப்ரல் 26, 1961

56. நீங்கள், “என் போதகர் மற்றும் என் சபை அதை விசுவாசிப்பதில்லை ” எனலாம். நல்லது, நீங்கள் - நீங்கள் தவறான கூட்டத்தில் கலந்து விட்டீர்கள். நீங்கள் தவறான கூட்டத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் பாருங்கள்? யோசபாத் அதைத்தான் செய்தான். அவன் தவறான கூட்டத்தில் கலந்துவிட்டான். அவன் அதிகமான மினுக்கைப் பெற்றான். ஆகாப் அவனுக்குத் தேசத்தின் மினுக்கான காரியங்களைக் காண்பித்தான். "நீங்கள் இன்னும் யேகோவாவில் விசுவாசம் கொண்டுள்ளீர்களா?” என்று யோசபாத் கேட்டிருப்பான் என்று நான் யூகிக்கிறேன். "ஓ, ஏன் நிச்சயமாகவே நாங்கள் யேகோ

வாவில் விசுவாசம் கொண்டுள்ளோம், நிச்சயமாகவே, நிச்சயமாகவே.” “சரி இப்பொழுது” என்றான்.

57. உலகம் உங்களை எங்காவது வரவேற்பதைக் காண்பீர்களானால், நினைவு கூறுங்கள், அவர்கள் வெட்டும் படியாக ஒரு கோடரியை உடையவர் களாய் இருப்பார்கள். பாருங்கள்? கிறிஸ் தவ குடும்பத்திலிருந்து வந்து ஒருபோதும் புகைபிடிக்காமலும் மது அருந்தாமலும் இங்கு வந்துள்ள இளம்பெண்ணே, உனக்கு புகைக்கும்படியாக ஒரு சிகரெட்டை தர ஒரு பெண் முயல்வாளானால் அவள் உன்னை வெட்டித்தள்ள ஒரு கோடரியை உடையவளாயிருக்கிறாள். அந்த வாலிபன் உன்னை ஒரு நடனத்திற்கு அழைத்துச் சென்றால் அங்கே உன்னை வெட்ட ஒரு கோடரி உள்ளது. பாருங்கள்? சற்றே கவனித்து அப்படிப்பட்ட கூட்டத்திலிருந்து

வெளியே இரு. அதிலிருந்து விலகியிரு. அவர்கள் எவ்வளவு நல்லவர்கள் போல காணப்பட்டாலும் தீமைக்கு விலகியிரு என்று வேதம் கூறுகிறது.

58. அதை விட்டு தூர இரு. பாவம் செய்யாமல் அக்கூட்டத்தில் இணைந் திருக்க முடியுமானாலும் கூட அதனின்று விலகியிரு. செய்யப்பட வேண்டிய காரியம் அதுவே. பாவம் செய்யாமல் அந்தக்கூட்டத்தில் செல்லக்கூடுமா என்று பார்க்காமல் உங்களால் அந்தக் கூட்டத் தைவிட்டு எவ்வளவு தூரம் விலகியிருக்க முடியும் என்று பாருங்கள்.

59. மலைக்கு மேல் செல்லவேண்டும் என்றிருந்த ஸ்காட்லாந்துக் காரனைப் போல. அங்கே அவனுக்கு மூன்று ஓட்டுனர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன், "மிகப்பெரிய உச்சியாக இருக்

கிறதே, பாதை அதுவரை செல்கிறதா?” என்றான். அவன், "அது தான் பாதை” என்றான். அவன், "நல்லது பாதை எவ்வளவு அகலமாய் உள்ளது?" என்று கேட்டான். அவன், "அந்தப்பாதை வண்டி யின் சக்கரத்தினின்று பத்து அங்குலம் மட்டும் அகலமாக உள்ளது” என்றான். அவன், "அப்படியானால் ஒரு நல்ல ஓட்டுனரை தெரிந்து கொள்ளுங்கள்" என்றான். அவன், "கண்டிப்பாய் மலைக்கு மேல் செல்ல வேண்டும். எனவே வாக னத்தை மேலே ஓட்டு” என்றான்.

60. ஓட்டுனர்களில் ஒருவன், “நான் என்னுடைய குதிரைகளை ஒரு இமைப் பொழுதில் வேகமாய் அந்த விளிம்புக்கு இரண்டு அங்குலம் தூரம், அருகே சென்று ஆனால் விழாமல் ஓட்டமுடியும்” என்றான்.

61. இரண்டாம் ஓட்டுநர் நடந்து வந்து, "நான் அந்தப் பாதையின் விளிம்புக்கு மூன்று அங்குல தூரம்வரை சக்கரம் இருக்கிறது போல் மிக வேகமாகவும் விழாமலும் போக முடியும்'' என்றான். மற்ற ஓட்டுநர் அங்கே அப்படியே நின்று கொண்டிருந்தான். அவன் அந்த ஓட்டுநரிடம் தன் விரல்களை நீட்டி, “உன் காரியம் என்ன?” என்று கேட்டான். அவன் "ஐயா, நானும் அவ்விதமாக ஓட்டிச்செல்ல முடியும். ஆயினும் நான் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை மேற்கொள்ள மாட்டேன். நான் பாதையின் விளிம்பிலிருந்து எவ்வளவுதூரம் விலகியிருக்க விரும்புகிறீர்களோ அவ்விதமாக ஓட்டுவேன்” என்றான்.

62. அவன், "நான் உன்னுடைய பிரயாணி” என்றான். அது தான் சரி. அது அப்படித்தான் இருக்கிறது. தேவனுக்கு

முன்பாக இருப்பதற்கு மாறாக அவர்கள் கூட்டத்திலிருக்க என்ன செய்யலாம் என்று பார்க்காதே; பாவத்தினின்றும், அவர்களுடைய தன்மைகள், முறைமைகள், மற்றும் அவிசுவாசத்தினின்றும் எவ்வளவு தூரம் விலகியிருக்கமுடியும் என்று பார். தேவ பக்தியற்ற ஒவ்வொரு காரியங்களிலிருந்தும் விலகியிரு. அதைவிட்டு தூரமாய்ப் போ. அதைவிட்டு விலகியிரு.

63. ஒரு மனிதனோ, ஸ்திரீயோ கானானுக்குள் சென்று தேவனின் நன்மையானவைகளை ருசிபார்த்ததுண்டானால், பாவ காரியங்களைக் குறித்து கவலைப்பட மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் கானானின் நல்ல திராட்சப் பழங்களை ருசி பார்த்ததுண்டானால் அவர்கள் அதனின்று விலகியிருப்பார்கள்.

**பொல்லாங்கை காணும்போது அதை உதறித் தள்ளு. அதிலிருந்து முழுவதுமாக பிரிந்து வா. அதிலிருந்து வெகுதூரம் வந்து விடு.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: சகலத்தையுமுடையவர்களாக இருத்தல், 62-05-06

26. இப்பொழுது, ஒருநாள் ஆபிரகாமுக்கு அது ஒருவிதத்தில் கடினமாகவும், பாவத்தில் உழன்று கொண்டிருந்த லோத்துக்கு அது எளிதாகவும் இருந்தது. பாவம் எவ்வளவு எளிதாகவும் இனிமையாகவும், பகடற்றதாகவும் காணப்படுகிறது! லோத்து, ''நான் விசுவாசிக்கும் வரைக்கும் நான் தேவனை விசுவாசிக்கிறேன். எனவே நான் ஏன் சோதோமுக்குச் செல்லக் கூடாது? நான் செய்வது சரியே. நான் ஒரு விசுவாசி'' என்று சொல்லியிருப்பான். ஆனால் அவன் செய்தது சரியல்ல.

பாருங்கள், தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, அவன் எல்லாவற்றையும்

விட்டுப் பிரிந்து வரவேண்டுமென்று கூறினார். நாமும் அதைத்தான் செய்ய வேண்டும். தேவன் நம்மை பாவத்தி லிருந்து முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறார். "அதை விட்டு வெளியே வா. அதற்கு உடன்படாதே". பொல் லாங்கை காணும்போது அதை உதறித் தள்ளு. அதிலிருந்து முழுவதுமாக பிரிந்து வா. அதிலிருந்து வெகுதூரம் வந்து விடு. அது எவ்வளவு நல்லதாக தென்பட்டாலும், அதன் மேல் நடந்து செல்லாதே.

27. இங்குள்ள நீங்கள், சகோ. பிரன் ஹாமே, சில சமயங்களில் திருட வேண் டும் என்னும் சோதனை ஏற்படுகிறது. புகை பிடிக்க வேண்டும் என்னும் சோதனை ஏற்படுகிறது எனலாம். பெண்களும் அவ் வாறே, "உலகப்பிரகாரமான பெண்களைப் போல் அவலட்சணமான உடைகளை உடுத்த வேண்டும், என்னும் சோதனை

உண்டாகிறது'' எனலாம். வாலிபப் பெண் கள் அது சோதனை என்று நீங்கள் எண்ணலாம், அப்படியானால் ஊழியத்தி லுள்ளவர்களைக் குறித்தென்ன? அவர்கள் ஒவ்வொரு அசைவையும் ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கின் றனரே. அது எவ்வளவு பெரிய பொறுப்பு. உங்களைக் காட்டிலும் அவர்கள் நியாயத்தீர்ப்பின் போது அதிகமாக பதில் கூற வேண்டியவர்களாயுள்ளனர். நீங்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு மாத்திரமே பதில் கூற வேண்டும். நாங்களோ, நாங்கள் பிரசங்கிக்கும் அனைவருக்காகவும் பதில் கூற வேண்டியவர்களாயிருக்கிறோம். பாருங்கள்? எனவே சாத்தான் தொடர்ச்சி யாக நீங்கள், ''அது அழகான உடையல் லவா? அதை உடுப்பது தவறு தான். ஆனால் அது அழகாயிருக்கிறதல்லவா? அது எனக்கு சரியான அளவாக இருக்கும்''

எனலாம். அது என்னைப் பொறுத்த வரையில் .... அது தவறென்று உங்களுக்குத் தெரியும். ஒரு போதகரிடம், 'நீங்கள் இங்கு நடக்கும் கூட்டத்துக்கு செல்ல வேண்டும். அது மிகவும் நன்றாயுள்ளது என்று சபையோர் கூறுகின்றனர்' என்று யாராகிலும் ஒருவர் கூறினால், நீங்கள் தேவனுடைய சமூகத்தில் காத்திருந்து, அவர் 'போ' என்று சொன்னால் மாத்திரமே போக வேண்டும், பாருங்கள். ''ஓ, அங்கு சென்று அந்த நபரைக் காண்பீர்களா? அது இப்படி இப்படி உள்ளது.'' நீங்கள் அதைக்குறித்து மிகவும் கவனமாயிருக்க வேண்டும். பாருங்கள்? ஓ, அது மிகவும் தந்திரமுள்ளது. இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து நாம் மிக கவனமாயிருக்க வேண்டும்.

ஆபிரகாமும் கூட கவனமாயிருக்க வேண்டியதாயிருந்தது. அவன் லோத்

துடன் சோதோமுக்குச் செல்வதற்கு பதிலாக தன்னைப் பிரித்துக்கொண்டு, வனாந்தரத்துக்கு சென்று, நிந்தைப்படும் கர்த்தருடைய சிலருடன் தன் வழியைத் தெரிந்து கொண்டான். அதுவே நம்முடைய மனப்பான்மையாய் இருக்க வேண்டும். அது கடினமானாலும், எளிதானாலும், நாம் தேவனுடைய ஜனங்களின் வழியைத் தெரிந்துகொள்ள வேண்டும். எந்த நேரத்திலும், அவர் எங்கு கூப்பிட்டாலும், நீங்கள் செல்ல ஆயத்தமாயிருங்கள்.




வேதாகமம், “தீமையின் தோற்றத்தின் பக்கத்தில் கூட போகாமல் விலகியிருங்கள்” என்று கூறுகிறது.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஊதாரி, ஆகஸ்ட் 27, 1950 பிற்பகல்

22. இந்த பிற்பகலில் இந்த ஊதாரியை கவனியுங்கள், அவன் எங்கே இருந்தான்: ஒரு எபிரேயனுக்கு மோசமான இடமாகிய ஒரு பன்றி தொழுவத்தில் இருந்தான்.

கவனியுங்கள், இப்பொழுது இந்த நாடகத்தை பார்ப்போம். ஒரு பழைமை நாகரீகமான நாட்டுப்புற வீடு அங்கே இருக்கிறது. நாம் அதை சிறிது நேரம் நம்முடைய சிந்தையில் நிலை நிறுத்து வோம். அருமையான வயதான கணவனும் மனைவியும் தங்களுடைய ஜீவியம் முழுவதும் கடினமாக உழைத்து, அங்கே வாழ்ந்து கொண்டிருப்பதை என்னால் காண முடிகிறது. அவர்களுக்கு இரண்டு

மகன்கள் இருந்தனர். நிச்சயமாகவே மகன் எப்பொழுதும் சொத்துக்கு சுதந்திரவாளியாய் இருக்கிறான். பிறகு ஒரு வேளை இந்த இளைய மகன்... அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சபைக்குச் சென்று, அவர்கள் தேவனை நேசித்து, அவர்கள் தங்களுடைய முழு இருதயத்தோடும் தேவனைச் சேவித்துக் கொண்டிருந்ததாக நாம் குறிப்பிடலாம்.

ஆனால் ஒரு நாள் இந்த இளைய குமாரன் தான் போய் சேரக்கூடாத ஒரு கூட்டத்துடன் போகத் துவங்கினான் என்று நாம் குறிப்பிடுவோம். இந்த பிற்பகலில் இங்கிருக்கும் வாலிபனே, வாலிப ஸ்திரீயே கவனி, நீ அப்படியே கிறிஸ்தவ செல்வாக்கின் கீழிருந்து சென்ற உடனே, நீ தவறான கரங்களில் இருக்கிறாய். சரியாக அப்பொழுதிலிருந்து, நீ உன்னுடைய பின்வாங்கிபோன வழியிலிருக்கிறாய்.

அதை ஞாபகம் கொள்ளுங்கள். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கின் கீழிருந்து அப்படியே சென்ற உடனே. பையன் யாரென்றோ அல்லது பெண் யாரென்றோ எனக்கு கவலையில்லை, அவர்கள் இரட்சிக்கப்படாதிருந்தால் அவர் களிடமிருந்து விலகியிருங்கள். அது மிகவும் சரியே. மனிதர்களே, நீங்களும் கூட.

யாரோ ஒருவர், 'நல்லது, நான் ஒரு மதுக்கடைக்குள் ஒரு மனிதனுடன் போக முடியும். அவன் பீர் மற்றும் விஸ்கியை குடிக்கும் போது நான் ஒரு கோக் குளிர் பானத்தை அருந்திவிட்டு, திரும்ப வெளியே வந்து அதே நபராக இருக்க முடியும்” என்று கூறினார். நான் அதை சந்தேகிக்கிறேன். அது சரியே. வேதாகமம், "தீமையின் தோற்றத்தின் பக்கத்தில் கூட போகாமல் விலகியிருங்கள்” என்று கூறு

கிறது. சத்துருவின் இடத்தை விட்டு நீங்கியிருங்கள்...

அந்த பழைய சரிவில் சறுக்கிச் செல்லும் வண்டி மிகவும் வழுவழுப்பானது ...?... சரிவில் சறுக்கிச் செல்லும் வண்டி (அல்லது அவ்வண்டியில் அமர்ந்து செல்வது), வீழ்ச்சியில் நீ கீழே விழுவதை அறியும் முன்பே உடனே அதை விட்டு விலகு...?

23. (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசிரியர்]...?... அந்த மலையை சுற்றி அவனை அழைத்துச் செல்ல அவன் யாரையாவது கூலிக்கு அமர்த்தலாமா என்று வியந்தான். ஒருவன், "நல்லது, நான் ஓரத்திலிருந்து இரண்டு அடிக்குள்ளாக இருக்கும்படியாக நிற்காமல் முழு வேகத்தில் இந்த குதிரைகளை நாலுகால்

பாய்ச்சலில் வேகமாக என்னால் ஓட்ட முடியும்” என்றான்.

மற்றொருவன், "நான் நிற்காமல் ஆறு அங்குலங்களுக்குள்ளாக அதை ஓட்ட முடியும்" என்றான்.

அவன் மற்றொருவனிடம், “உன்னைக் குறித்தென்ன?” என்றான்.

அவன், "நான் எவ்வளவு தூரம் விலகியிருக்க முடியுமோ, அவ்வளவாக விலகியிருப்பேன்” என்றான்.

அவன், "நீ என்னை (அங்கே) அழைத்துச் செல்" என்றான்.

உங்களால் பாவத்துக்கு எவ்வளவு அருகில் செல்ல முடியும் என்று பார்க்க வேண்டாம். உங்களால் பாவத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்க முடியும் என்று பாருங்கள். அதின் வழியிலிருந்து

விலகி, அப்படியே அதை விட்டு முழுவதுமாக தனியே பிரிந்து வாருங்கள். அதில் கிடந்து அந்த காரியங்களை மகிழ்ச்சியோடு செய்து கொண்டிருக்கிற இங்கேயுள்ள அமெரிக்க ஜனங்களுக்கு அது ஒரு அவமானம்.

நீங்கள் இன்று வீடுகளுக்கு செல்லுங்கள்... நான் கிறிஸ்தவ வீடுகளுக்கு சென்றிருக்கிறேன், அவர்கள் குளிர் பதனப் பெட்டியைத் திறக்கும் போது, அது முழுவதும் பீர் பாட்டில்களால் நிரம்பி இருக்கும், கிறிஸ்தவ வீடாக இருக்க வேண்டியவை. கிறிஸ்தவர்களே, அந்த விதமான பொருட்களின் னாலே உங்களை முட்டாளாக்கிக் கொள்ள வேண் டாம்...? நாம் வீட்டிலிருந்த பழைமை நாகரீகமான ஜெப பலிபீடத்தை விற்று போட்டுவிட்டு, அதற்கு பதிலாக ஒரு சீட்டாட்ட மேஜையை செய்து வைத்துள்

ளோம். அதனால் தான் உங்களுடைய பிள்ளைகள் ஒழுக்கக்கேடான நடத்தைக்கு திரும்புகின்றனர். அது இளம் பருவத்தினரின் ஒழுக்கக் கேடான நடத்தையல்ல. அது பெற்றோர்களின் ஒழுக்கக் கேடான நடத்தையாயுள்ளது. பெற்றோர் பிள்ளைகளுக்கு போதித்து, அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்களைக் குறித்து அக்கறைக் கொண்டிருப்பார்களானால், அது இருக்காது...?... அந்த விதத்தில் அது சரியே.

24. இந்த வாலிபப் பெண்கள் மனிதர்களுக்கு முன்பாக குளியல் உடைகளை அணிந்துக் கொண்டு, இந்த கடற்கரையில் படுத்துக் கிடப்பதை பாருங்கள். இங்கே வெளியே தெருக்களில், இந்த கீழ்த்தரமான ஆடைகளில் சிலவற்றுடன், யாராவது ஒருவர் அவர்களில் ஒருவரை அவமதிக்கட்டும், மேலும் நீங்கள்..?... நீங்கள் தான்


அந்த ஒருவர். அது சரியே. அவளை அவ்விதமாகவே வெளியில் அனுப்புங்கள் அல்லது அவ்விதமாகவே வெளியே போகட்டும்...

அது போன்று, நான் அன்றொரு நாளில் ஏதோ ஒரு சிறு பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தேன்; அவள், "நல்லது, நான் வெகு நேரம் சூரிய ஒளி சரீரத்தில் படும்படி இருப்பதால் ஏற்படும் விரும்பத் தக்கவிதமான பழுப்பு நிறத்தை சரீரத்தில் பெற்றுக் கொள்ளும்படி முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

நான், "பார். எனக்கும் வீட்டில் ஒரு சிறு பெண் உண்டு; அவளுடைய முடிவு என்னவாகும் என்று எனக்கு தெரியாது, ஆனால் அவள் இதைப்போன்று படுத்துக் கிடப்பதை நான் எப்பொழுதாவது கண்டு பிடித்தால், அவள், மகனின் தோல் பதப்

படுத்துவதை பெற்றுக் கொள்வாள். திரு. பிரன்ஹாமின் மகன் ஒரு உலோகக் கம்பியினாலோ அல்லது ஏதோ ஒன்றைக் கொண்டு அவளுடைய முதுகில் பதம் பார்த்து, நான் அவளை வலுக்கட்டாயமாக வீட்டிற்கு அழைத்து வருவேன்” என்றேன். அது சரியே. அவளுக்குத் தேவையான சரியான விதமான பதப்படுதலை அவள் பெற்றுக் கொள்வாள். அது அப்படியே மிகவும் சரியே. (குழுமியிருக்கும் கூட்டத்தார் கைத்தட்டி பாராட்டுகின்றனர் - ஆசிரியர்] உங்களுக்கு நன்றி. நமக்கு தேவை அவ்விதமான (தோலை) பதப் படுத்துதல் தான்....?...

# பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து